# 03

# கணக்கீடு

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்
## தரம் 12
## இரட்டைப் பதிவு

1. பின்வரும் தகவல்கள் 2022 மார்ச் மாதத்து கடன் தொடர்பானது,

| விற்பனை | பட்டியல் நிலை (ரூ.000) | வியாபார கழிவு |
|---|---|---|
| காசுக்கு | 2000 | 10% |
| கடனுக்கு | 4000 | 5% |

விற்பனை திகதியிலிருந்து 15 நாட்களக்குள் காசு செலுத்தப்படுமானால் கடன் பட்டோருக்கு 5% கழிவு வழங்கப்படுகிறது. இந்த நிறுவனத்தின் புத்தகங்களுக்கேற்ப கடன்பட்டோரில் 50% இக்கழிவினை பெற்று பணத்தைச் செலுத்தியுள்ளார்கள்.

கடன்பட்டோருக்கு வழங்கப்பட்ட கழிவுக்கான சரியான இரட்டைப் பதிவு,

| | வரவு | | செலவு | |
|---|---|---|---|---|
| 1) | கொடுத்த கழிவு | 95000 | காசு கணக்கு | 95000 |
| 2) | கொடுத்த கழிவு | 95000 | கடன்பட்டோர் கட்டுபாட்டுக் கணக்கு | 95000 |
| 3) | கொடுத்த கழிவு | 195000 | காசு கணக்கு | 195000 |
| 4) | கொடுத்த கழிவு | 295000 | கடன்பட்டோர் கட்டுபாட்டுக் கணக்கு | 295000 |
| 5) | கொடுத்த கழிவு | 395000 | காசு கணக்கு | 395000 |

2. சமகி நிறுவனத்தின் 2022.03.31 திகதியில் முடிவடைந்த வருடத்தில் ரூ.250000 இயந்திர பழுதுபார்த்தல் செலவு இயந்திர கணக்கில் பதியப்பட்டுள்ளது. இயந்திரம் வருடத்திற்கு 10% வீதம் பெறுமானத் தேய்வு விடப்படுகிறது.

மேலேயுள்ள தவறை திருத்துவதற்கான சரியான இரட்டை பதிவு,

| | | வரவு | செலவு |
|---|---|---|---|
| 1) | இயந்திரம் பழுதுபார்த்தல் கணக்கு | 250000 | |
| | இயந்திர கணக்கு | | 250000 |
| 2) | இயந்திரம் பழுதுபார்த்தல் கணக்கு | 250000 | |
| | இயந்திர பெறுமானத் தேய்வு | 25000 | |
| | இயந்திர கணக்கு | | 250000 |
| | இயந்திர பெறுமானத் தேய்வு ஒதுக்கல் கணக்கு | | 25000 |
| 3) | இயந்திர கணக்கு | 250000 | |
| | இயந்திர பெறுமானத் தேய்வு கணக்கு | 25000 | |
| | இயந்திர பழுதுபார்த்தல் கணக்கு | | 250000 |
| | இயந்திரம் பெறுமானத் தேய்வு ஒதுக்கல் கணக்கு | | 25000 |

BUSINESS & COMMERCE BRANCH

4) இயந்திர கணக்கு 250000
இயந்திர பழுதுபார்த்தல் கணக்கு 250000

5) இயந்திர பழுதுபார்த்தல் கணக்கு 250000
இயந்திரம் பெறுமானத் தேய்வு ஒதுக்கல் கணக்கு 25000
இயந்திர கணக்கு 250000
இயந்திர பெறுமானத் தேய்வு கணக்கு 25000

3. சுகி நிறுவனத்தின் 2022.03.31 திகதி விற்பனை நாட்குறிப்பேட்டின் மொத்த பெறுமதியின் கூட்டுதொகை 172500 ஆகும். $VAT$ வீதம் 15% ஆகும். பின்வரும் தகவல்களை பொது நாட்குறிப்பேட்டில் பதிவதற்கான பதிவை எழுதுக.

4. மதுரங்க நிறுவனத்தின் பின்வரும் தகவல்கள் உமக்கு தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 2022.12.31 சம்பளமும் கூலியும் (தேறிய) | 21600 |
| ஊழியர் சேமலாப நிதியம் EPF (ஊழியர்) | 3600 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் ETF | 720 |

ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும் போது 10% ஊழியர் சேமலாப நிதியத்துக்கு கழித்துக் கொண்டு வழங்கப்படுவதுடன் சம்பளத்தில் வேறு அறவீடுகள் இல்லை. தொழில் கொள்வோரால் ஊழியர் சேமலாப நிதிக்கு 15%ம் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 3% செலுத்தப்படுகிறது.

2022.03.31 திகதிக்கு சம்பளமும் கூலியும் தொடர்பான இரட்டை பதிவை எழுதுக.

5. ரூ.60000 செலுத்த வேண்டிய கடன்பட்டோர் ஒருவர் ரூ.54 000 கான காசோலை ஒன்றை வழங்கியுள்ளதுடன் அதை வங்கியிலிட்டபின் மறுக்கப்பட்ட காசோலை என அறிவிக்கப்பட்டது. காசோலை மறுக்கப்பட்டது தொடர்பான சரியான இரட்டை பதிவை எழுதுக.

6. தாமரைச் சங்கத்தின் 2021.04.01 திகதி அங்கத்தவர்கள் 150 பேர் காணப்பட்டனர். இந்நாளில் 8 பேர் 2019.04.01 திகதி ரூ.30000 செலுத்தி ஆயுள் அங்கத்துவத்தைப் பெற்றுள்ளனர். ஆயுள் சந்தாவை 10 வருடங்களில் வருமானமாக காட்டுவது சங்கத்தின் கொள்கையாகும். வருடத்தில் ஆயுள் அங்கத்துவ சந்தா கணக்கை பதிவதற்கான இரட்டை பதிவை எழுதுக.

7. பின்வரும் விடயங்கள் சாரா நிறுவனத்தின் 2021.04.01 திகதிக்கான மீதியாகும்.

| | (ரூ) |
|---|---|
| கூறப்பட்ட மூலதனம் (பங்கு 150000) | 1500000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 250000 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 700000 |

கம்பனி தற்போதுள்ள பங்குதாரர்களுக்கு உபகாரப் பங்கு வழங்குவதற்காக சக்கரமொன்றை பேணுவதற்கு தீர்மானித்துள்ளது. எல்லாப் பங்குதாரர்களுக்கும் $1/5$ பங்கு கிடைக்கக் கூடியதாக உபகாரப் பங்கு வழங்கப்பட்டது. உபகாரப் பங்கு வழங்கல் தொடர்பான இரட்டைப் பதிவைக் குறிப்பிடுக.

8. $VAT$ க்கு பதிவு செய்த $ABC$ நிறுவனத்தின் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கான இரட்டைப் பதிவைத் தருக.

- $Y$ யிடம் கொள்வனவு ரூ.200000 ($VAT$ இன்றி) பெறப்பட்ட $VAT$ 8%

BUSINESS & COMMERCE BRANCH

9. $VAT$ க்கு பதிவு செய்த நிறுவனத்தின் வெளிநிரம்பல் நாட்குறிப்பேட்டுடன் தொடர்பான இரட்டைப் பதிவு யாது? (பொது நாட்குறிப்பேட்டில் பதிவதற்கான)

10. விற்பனை இன்றேல் திருப்புக என்ற அடிப்படையில் அனுப்பப்பட்ட இருப்பை பதிவதற்கான இரட்டைப் பதிவு பின்வருவனவற்றில்,

| | | வரவு | செலவு |
|---|---|---|---|
| 1) | இறுதி இருப்புக் கணக்கு | 160 | |
| | வியாபார வருமதி | | 160 |
| 2) | இறுதி இருப்புக் கணக்கு | 240 | |
| | வியாபார வருமதி | | 240 |
| 3) | விற்பனை கணக்கு | 160 | |
| | வியாபார வருமதி | | 160 |
| 4) | விற்பனை கணக்கு | 240 | |
| | வியாபார வருமதி | | 240 |
| 5) | இறுதி இருப்பு கணக்கு | 240 | |
| | விற்பனைக் கிரயம் கணக்கு | | 240 |

BUSINESS & COMMERCE BRANCH